| வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **15/06/2024** | முதல் | **19/06/2024** |
| அறிக்கை எண் : | **048/ 2024** | வெளியீட்டு நாள் : | | **14/06/2024** | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (09.06.2024 முதல் 13.06.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –19-06-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09/06 | 10/06 | 11/06 | 12/06 | 13/06 | தேதி | நாள்-1 15/06 | நாள்-2 16/06 | நாள்-3 17/06 | நாள்-4 18/06 | நாள்-5 19/06 |
| 1.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 1 | 0 | 0 | 0 |
| 35 | 37 | 39 | 38 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 38 | 37 | 38 | 37 | 37 |
| 25 | 26 | 27 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 26 | 26 | 25 | 25 |
| 4 | 3 | 4 | 7 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 6 | 6 | 5 |
| 78 | 66 | 64 | 76 | 69 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 53 | 54 | 48 | 57 | 46 | | 40 | 40 | 40 | 50 | 40 |
| 10 | 7 | 9 | 5 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 16 | 16 | 18 |
| மேற்கு | வட மேற்கு | மேற்கு | மேற்கு | வட மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

**குறுஞ்செய்தி :**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 16 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 18 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (14 - 27 ஜூன் 2024):**

**மழைப்பொழிவு :**

14-06-2024 - 20-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை ஒட்டியே மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

14-06-2024 - 20-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

14-06-2024 - 20-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : உளுந்து, கரும்பு, கால்நடை**

**உளுந்து:**

உளுந்து பயிரில் 1% யூரியாவை இலை வழியாக தெளிப்பது மகசூலை அதிகரிக்க செய்யும் ஒரு யுக்தியாகும்.

உளுந்து பயிரில் மகசூலை அதிகரிக்க இலை வழித் தெளிப்பாக 1% யூரியா விதைத்த 30 மற்றும் 45ம் நாளில் தெளிக்க வேண்டும்.

அல்லது 2% டி.ஏ.பி கரைசலை இலை வழித் தெளித்தும் மகசூலை அதிகரிக்க செய்யலாம்.

**கரும்பு:**

நிலவும் பருவச்சூழ்நிலையில் கரும்பு சாகுபடியில் மேலுரமிடுதல் நல்ல பயனளிக்கும்.

கிணற்றுப் பாசனமுடைய பகுதிகளில் ஒரு எக்டேருக்கு 225 கிலோ தழைச்சத்து மற்றும் 112 ½ கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் மூன்று சம பாகங்களாகப் பிரித்து கரும்பு நடவு செய்த 30, 60 மற்றும் 90ம் நாட்களில் இடுதல் வேண்டும்.

**கால்நடை:**

கால் நடைவளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு இந்த தருணங்களில் தங்களின் மாடுகளை கோமாரி எனும் கால்கானை வாய்க்கானை நோய் தாக்குவதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக பெரும் பொருளாதார சேதாரம் ஏற்பட வாய்ப்பு உள்ளது

ஆகையால் ஜூன் மாதத்தில் அருகில் உள்ள அரசு கால்நடை மருந்தகத்தை அணுகி தங்களது மாடுகளுக்கு கோமாரி எனப்படும் கால்கானை வாய்க்கானை நோய்க்கான தடுப்பூசியினை போட்டுக் கொள்ள வேண்டும்.

மேலும் நான்கு மாதத்திற்கு ஒரு முறை கோமாரி நோய்த் தடுப்பூசியை தவறாமல் போட வேண்டும்.